தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

S.நாகராஜன் தலைவர் | K.சந்திரசேகரன்,B.A பொதுச்செயலாளர் | B.தியாகராஜன், M.Com., நிதிச்செயலாளர்

கடித எண்: 103/19
01-06-2019

பெறுநர்,
தலைமைப் பொறியாளர் /பணிஅமைப்பு,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
144, அண்ணாசாலை,
சென்னை – 2.

ஐயா,

பொருள் : நிர்வாகம் - பல்வேறு பணித்தொகுப்பைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் - வட்டமாறுதல் கோரி ஜனவரி/2019ல் சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்களை பரிசீலித்து காலியாக உள்ள பொறுப்புகட்கெதிராக 30-06-2019ம் நாளுக்குள் மாறுதல் உத்திரவுகள் வழங்கிட வேண்டுகோள்.

********

நடைமுறையில் உள்ள விருப்பமாறுதல் கொள்கைபடி பல்வேறு பணித்தொகுப்புகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் ஊழியர்களுள் சிலர் வட்டமாறுதல் கோரி தலைமைப்பொறியாளர் பணிஅமைப்பு அவர்களுக்கு இந்த ஆண்டு ஜனவரி மாதம் விண்ணப்பங்கள் சமர்ப்பித்து மாறுதல் உத்திரவுகளுக்காக காத்துக்கொண்டுள்ளனர்.

பணிஓய்வு, பதவிஉயர்வு போன்ற காரணங்களினால் நிரப்பப்பட வேண்டிய காலிபொறுப்புகளுக்கெதிராக விருப்பமாறுதல் கோரி காத்துக்கொண்டிருப்பவர்களுள் தகுதி உடையவர்களுக்கு வட்டமாறுதல் உத்திரவுகளை வழங்கி உதவிடுமாறு வேண்டுகின்றோம்.

நடைமுறையில் உள்ள விருப்பமாறுதல் கொள்கைகள்படி ஜனவரி2019ல் சமர்ப்பித்துள்ள விண்ணப்பங்கள் 30-06-2019ம் நாள்வரைதான் செல்லுபடியாகும். அந்த நாளுக்குப்பின் நிலுவையில் இருக்கும் விண்ணப்பங்கள் காலாவதியாகி அந்த நாளுக்குள் மாறுதல்பெற இயலாதவர்கள் மீண்டும் ஜூலை மாதம் புதிதாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

எனவே நிலுவையில் உள்ள விருப்பமாறுதல் விண்ணப்பங்களை பரிசீலித்து மாறுதல் பெற தகுதி உடையவர்களுக்கு 30-06-2019ம் நாளுக்குள் விருப்பமாறுதல் உத்திரவுகளை வழங்கிட ஆவன செய்திட வேண்டுகின்றோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

பொதுச்செயலாளர்

நகல் : 1. மத்தியச்சங்கப் பொறுப்பாளர்கள்.
2. மண்டலச்செயலாளர்கள்.
3. செய்திமடல்.